“ஓம் ஆறுமுக அரங்கமகா தேசிகாய நமஹ” என தொடர்ந்து மனம் உருகி ஜெபித்து வருவதுடன் அரங்க மகான் அரங்கரின் அறப்பணிகளிலே தொண்டுகளைச் செய்து அரங்கரின் தொண்டர்களாகி அரங்கரைப் பின்தொடரும் மக்களுக்கு இடர்கள் ஏதும் இல்லாதவர்களாகி உலகை உலுக்கும் இயற்கை பேரிடரும்கூட அவர்களை நெருங்காமல் விலகி அவர்கள் மேல்நிலையை பெறுவார்கள்.

உலக மக்களே நீங்கள் கலிகாலத்தின் துன்பங்களில் இருந்து விடுபட்டு, குறைகளற்ற நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டுமாயின் தவதருமபலம்மிக்க அவதார அரங்க மகானின் ஓங்காரக்குடிலினை அணுகி அரங்க மகானின் திருவடி பணிந்து குருவே என வணங்கி தரிசித்து அரங்கமகானை பின் தொடர்ந்திட எமனையும் வெல்லும் சக்தி பெருகிடும். அவர்களெல்லாம் அதுவரை அவர்கள் சென்ற அஞ்ஞான வழியினை விட்டு குருமார்க்கத்தில் சென்று மெய்ஞான வழியினில் சென்று தன்னை உணரவும் பகுத்தறியவும் ஞானவானாக மாறிடவும் வழிவகை செய்யும்.

ஆறுமுக அரங்க மகான் உலக நலன் கருதி செய்கின்ற ஆற்றல்மிக்க அன்னதானத்தினை நேரில் காண்பீர்களேயானால் உங்களைப் பற்றிய பேராசைகள் குறைந்து, ஆசாபாசங்களை புரிந்து பொருளாசையை விட்டு வல்லமைமிக்க தர்மத்தின் நெறியினில் சென்று தருமநெறி நழுவாது பின் செல்லும்

அகத்தியர் துணை


மகான் அகத்தியர்


குருநாதர்



ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

**www.agathiar.org**

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் - இரா.மாதவன்

**அன்னை மருத்துவமனை, துறையூர்.**

தங்களுடைய பிறந்தநாள், திருமணநாள்,
தொழில் தொடங்கிய நாள், குழந்தைகள் பிறந்த நாள்,
தங்களது குடும்பத்தின் சந்தோஷ நாட்களில் தாங்களும்
ஏழைகள் பசியாற பொருளுதவி செய்து
புண்ணிய காரியத்தில் பங்கேற்கலாம்.

G Pay
accepted here

Sri Agathiar Sanmaarga
Charitable Trust
+91 98430 11484

UPI ID : 9843011484@okbizaxis

நன்கொடை அனுப்பிய பின் 96882 78666 என்ற
எண்ணிற்கு தகவல் தெரிவிக்கவும்.



அற்புதமான அரிய வாய்ப்பையும் பெற்று அன்னதானம் செய்திடவும் அன்னதான பணிகளுக்கு பொருளுதவி செய்கின்ற தன்னார்வ போக்கும் வளரும். உலகின் பசிப்பிணியை போக்குகின்ற பெரும் செயல்பாட்டில் அவர்களும் பங்கு கொண்டு உயிர் காக்கும் சிந்தை வளரும், தரும சிந்தனைகள் அதிகமாகி அவர்கள் முன்செய்த பாவங்களான ஊழ்வினைகளும் அகன்று ஓடுமளவு தருமவான்களாகி மேன்மேலும் சேவைகளை தொடர்ந்து செய்து உலகைப் பற்றியுள்ள அழிவையும் இழிவையும் தருகின்ற செயல்களை உலகையே விட்டு நீக்கும் சக்தியும் பெற்று, பிற உயிர்களுக்கு எந்தவித துன்பமும் தராத ஜீவதயவு நெறியும் பெருகி, அரங்கர் கூறும் ஜீவதயவே வடிவான தூயஞான நெறிகள் எல்லாம் மின்னல் போல் அவர்தம் முன் பிரகாசித்து ஞானிகள் போற்றும் நன்மக்களாகி சிறப்படைவார்கள்.

அவர்கள் கலியுகத்தினில் பிறந்த போதும் அழியாமல் நிலைத்தன்மையோடு வாழ்ந்து ஆறுமுக அரங்கமகா தேசிகரால் ஞானவான் எனும் பட்டமும் பெற்று அரங்கரின் ஞானத்தேர்வில் வெற்றி பெற்று ஞானவான்களாகி முருகப்பெருமானின் அருளையும் பெற்று ஞானயுக வாழ்விற்கு தகுதி பெறுவார்கள்.

உலக மக்களுக்கு ஞானவான்களாகும் தகுதியை அளித்து, தக்க முறையில் ஞானத்தை அடைய நல்வழி காட்டி முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகானின் தவமாக வெளிவருகின்ற ஞானத்திருவடி நூலினை பயபக்தியுடன் அதிக அளவில் வாங்கி உலக மக்களுக்கு அளித்து உலகோரையும் அறநெறியில் நடந்திட செய்து ஞானத்திருவடி நூலினை முருகா முருகா என பூஜையில் வைத்து வணங்கி படித்து வரவர, இந்த உலகமே சர்வ வளமும் நலமும் பெற்றிடும். உலகினில் வலுவான ஞானஆட்சி மலர்ந்து உலகினில் தருமமும் நீதியும் சிறப்பாக காக்கப்படும். உலகினில் இயற்கையும் மகிழ்ந்து நீர் வளமும் நில வளமும், இயற்கை வளமும் பெருகி அருள் பாதுகாப்பையும் இயற்கை பாதுகாப்பையும் இவ்வுலகம் பெற்று இயற்கை பேரிடர்கள் இல்லாத பிரளயம் இல்லாத நல்லுலகமாக ஆகி ஞான ஆட்சி மலர்ந்து சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் கருவூரார்.

–சுபம்–

**எல்லா துன்பங்களையும் வென்று வெற்றி காண விரும்புகின்றவர்கள்**
**“ஓம் சரவணஜோதியே நமோ நம”**

என்ற மந்திரத்தை காலை மற்றும் மாலையில் சிறிது நேரம் ஜெபித்து வரவும்.
- மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

**முருகன் திருவடி வாழ்க**

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
22.02.1988 அன்று அருளிய அருளுரை

## முருகன் அருள்

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க அன்பர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

இந்தத் துறைக்கு வருபவர்கள் நற்செயல்களில் ஈடுபட்டு புண்ணியத்தை சேர்த்துக் கொள்ள வேண்டும். ஞானிகளெல்லாம் மிகப்பெரிய புண்ணியவான்கள். புண்ணியம் செய்ய செய்யத்தான் ஞானிகளை வணங்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கும். புண்ணியம் செய்திருந்தால்தான் ஓங்காரக்குடிலுக்கு வர முடியும்.

பாவம் செய்யாதிருக்க என்னைக் காப்பாற்றுங்கள் என்று ஆசானிடம் வேண்டுகோள் வைத்தால், ஆசான் அருள் செய்வார். நாம் ஆசானை வணங்கி பூஜித்து வந்தால், நம்மிடம் முரண்பட்ட அத்தனை பேரும் நமக்கு சாதகமாக நடந்து கொள்வார்கள்.

என்னுடன் பழகும் நண்பர்களிடம், நான் மனம் விட்டு பழகுகிறேன். ஆனால் அவர்கள் என்னை வஞ்சிக்கிறார்களே? என்று ஆசானிடம் வேண்டுகோள் வைத்தால், அந்த நண்பர்கள் மனம் மாறி முரண்பாடின்றி உடன்பாடாக நடந்து கொள்வார்கள்.

நான் என்னுடைய அதிகாரியிடம் நல்லபடி நடந்து கொள்கிறேன். ஆனால் அந்த அதிகாரியோ, எப்பொழுது பார்த்தாலும் கடுமையாக பேசி என் மனதை புண்படுத்துகிறானே நான் என்ன செய்வேன்? அவனை எதிர்த்து பேசினால் அன்றே என்னை தண்டித்து வேலையை விட்டு நீக்கி விடுவானே? நான் நித்தம் நித்தம் சாகிறேனே இதற்கு விடிவே இல்லையா என்று ஆசானை வணங்கி கேட்டால், அந்த அதிகாரி உனக்கு சாதகமாக நடந்து கொள்வான்.

ஆசான் அகத்தீசரின் தயவைப் பெற்றால், நம்மைச் சுற்றியுள்ளவர்கள் அத்தனை பேரும் நமக்கு சாதகமாக நடந்து கொள்வார்கள்.




முருகப்பெருமான் துணை
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

### கார்த்திகை பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, கார்த்திகை மாதம் 14ஆம் தேதி,**
**29.11.2020 - ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில்**
இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**
காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
D.**ராம்குமார்,** D.P.**சுதாகர்,** கோவை. D.**ரெங்கநாதன்,** சென்னை.



முருகப்பெருமான் துணை
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

### மார்கழி பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, மார்கழி மாதம் 14ஆம் தேதி,**
**29.12.2020 - செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில்**
இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**
காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
D.**ராம்குமார்,** D.P.**சுதாகர்,** கோவை. D.**ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளிய

## ஞானக்கவிகள்

1) மறை போற்றும் வேலவன் மலரடி போற்றிட மாயை
திரை நீக்கி அருள்வான் இன்பமே.

2) புண்ணியவான் சம்பந்தன் பொன்னடி போற்றிட
பண்ணிய பாவமெல்லாம் பறந்தே போமே.

3) மறைஞான சம்பந்தன் மலரடி போற்றிட
நிறைவான வாழ்வு இன்பமும் நல்குமே.

4) வாயில்லா ஜீவன்களை வதைத்தே உண்பவர்
தாயில்லா குழந்தை போல் தவிக்க நேருமே.

5) ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்
மாட்சிமை மிக்க மக்கள் வாழவே.

6) வித்தக வேலனை வேண்டி அழைத்திட
சத்து சித்து கைவசமாமே.

7) சைவத் தலைவன் சண்முகனைப் போற்றிட
வையகம் போற்ற வாழ்வு அருள்வான்.

8) ஐயன் வேலவன் அடியினை போற்றிட
வையகம் போற்ற வாழ்வார் நலமே.

9) அப்பா அருணகிரி அருளிய அலங்காரம்
தப்பாது பிறவிதனை ஒழிக்குமே.

10) ஞானத்திருவடியை நாள்தோறும் படித்திட
ஈனம் தவிர்த்து இன்பம் உண்டாம்.



**தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோள்**
**தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதந்**
**தவிரவைத் தான்நமன் தூதுவர் கூட்டந்**
**தவிரவைத் தான்பிற வித்துயர் தானே.**

**– திருமந்திரம் – சற்குரு நெறி – கவி எண் 2050.**

**தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதம்** – ஆசான் வினையை நீக்கி, சிரம்மீது அவர் திருவடியை வைத்தார், ஒன்றோடு ஒன்று முரண்பட்ட கோள்களெல்லாம் உடன்பாடானது, முரண்பட்ட அனைவரும் நமக்கு உடன்பாடானார்கள்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 10.**

பிறவிக்கடலை நீந்துவதற்கு ஞானிகள் திருவடியே ஓடமாக நமக்கு துணையிருக்கும்.

**ஓடமுள்ள போதெலா மோடியே யுலாவலாம்**
**ஓடமுள்ள போதெலா முறுதிபண்ணிக் கொள்ளலாம்**
**ஓடமு முடைந்தபோது வொப்பிலாத நாளிலே**
**ஆடுமில்லை கோலுமில்லை யாருமில்லை யானதே.**

**– மகான் சிவவாக்கியர் – கவி எண் 27.**

பிறவிக்கடலை கடப்பதற்கு ஞானிகள் பாதமே நமக்கு படகாக துணையிருக்கும். ஞானிகள் திருவடிகளைப் பற்றி நாம் பூஜை செய்தால் பிறவித் துயரை ஒழித்துவிடுவார்.

பிறவிக்கு காரணம் நாமா? இயற்கையா? என்றால் நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பிறவி நிச்சயமாக வரும்.

**அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்**
**தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்**
**அந்தம் ஆதி யென்மனார் புலவர்.**

**– மகான் மெய்கண்டதேவர் – சிவஞானபோதம் – முதல் சூத்திரம்.**

அவன், அவள், அது என்பது மும்மலத்திலே சார்ந்திருக்கும். அவன், அவள் என்பது ஆண், பெண்ணை குறிக்கும். இந்த உலகத்தில் இருபாலரும் உள்ளனர். அது என்பது ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ளவற்றை குறிக்கும்.

**அவையே தானே யாயிரு வினையிற்**
**போக்கு வரவு புரிய வாணையின்**
**நீக்க மின்றி நிற்கு மன்றே.**

**– மகான் மெய்கண்டதேவர் – சிவஞானபோதம் – இரண்டாம் சூத்திரம்.**

போக்கும் வரவும் புரியக் கூடிய செயலை நீ அறிந்தால் நிச்சயமாக பிறவியை அறுக்கலாம்.

**போக்கு வரவு புரிய வாணையின்** – இந்த இயக்கம் உனக்கு உட்பட்டதல்ல, இயற்கைக்கு உட்பட்டது. நீ அறிந்த அன்றே பிறவித்துயரிலிருந்து விடுபடலாம்.

**ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானுடம்**
**நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச் – சீரிய**
**பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த**
**அந்தமில்சீர்த் தாவரநா லைந்து.**

இவை அனைத்தும் **தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துஉளதாம்** என்கிறார். ஆதி அந்தமாக இருக்கக் கூடிய ஒரு பொருள், எந்த உயிரை தோற்றுவித்ததோ, அந்த உயிரின் மும்மலத்தில் சார்ந்திருக்கிறது. அதை அறிந்தால் நீ பிறவித்துயரை நீக்கிக் கொள்ளலாம்.

ஆணாகவும், பெண்ணாகவும், அது என்று சொல்லப்பட்ட அஃறிணையாகவும் இந்த உலக இயக்கம் இருக்கிறது. எந்தப் பொருள் தோற்றுவித்ததோ, அந்தப் பொருளை அவன் அறியவில்லை. அந்தப் பொருள் அவனுடைய மும்மலத்தில் சார்ந்திருக்கிறது.

**தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துஉளதாம்** – ஆதி அந்தமாக இருக்கக் கூடிய ஒரு பொருள், தான் தோற்றுவித்த உயிரின் மும்மலத்திலே சார்ந்திருக்கிறது. எந்தப் பொருள் நம்மை தோற்றுவித்ததோ, அதை அறிந்த அப்பொழுதே, அதுவே நாம் என்கிற அறிவு நமக்கு வரும்.

**அவையே தானே யாயிரு வினையிற்**
**போக்கு வரவு புரிய வாணையின்**
**நீக்க மின்றி நிற்கு மன்றே.**
**– மகான் மெய்கண்டதேவர் – சிவஞானபோதம் – இரண்டாம் சூத்திரம்.**

இதை ஆசான் தயவு கொண்டு அறிந்தால் பிறவித் துயரை நீக்கிக் கொள்ளலாம். இது ஆணை. இதை அறிய உன்னால் முடியாது. பிறவித் துயரை நீக்க உன்னால் முடியாது. **போக்கு வரவு புரிய வாணையின்** – ஆணை என்றால் கட்டளை என்று அர்த்தம். இது கட்டளைக்கு உட்பட்டுத்தான் நடக்கும்.

உன்னை வாழ வைப்பது உன்னுடைய அறிவு அல்ல. இயற்கைதான் உன்னை வாழ வைக்கிறது. இதை அறிந்தவர்கள் ஞானிகள்.

நீ ஆசானை தேடி அலைய வேண்டாம். உலக ஆசானை தேடி பொருளையும் காலத்தையும் நீ வீணடிக்க வேண்டாம். ஆசான் அகத்தீசரை வணங்கி, ஐயனே பிறவியை துன்பம் என்று யான் அறிவதற்கு அருள் செய்ய வேண்டுமென்று கேட்க வேண்டும்.



முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளிய

## ஞானக்கவிகள்

1) பற்று அறுத்த வேலவன் பதத்தை பற்றிட
நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்.

2) காலனை வெல்ல கடுந்தவம் வேண்டுமோ
வேலன் திருவடியே காலனை வெல்லும்.

3) சேவற் கொடியுடைய செவ்வேள் முருகன்
சாகாக்கல்வியை தந்தருள் புரிவான்.

4) சேவற் கொடியுடைய செந்தில்வேலவன்
காவல் கொண்டே காப்பான் நம்மை.

5) ஒன்றே மூவாசை முற்றிலும் வெல்வதற்கே
நன்றே அருளினான் ஞானபண்டிதன்.

6) தாழ்வகலும் தர்மம் தழைத்தோங்கும்
நமக்கு வாழ்வளிக்கும் அகத்தியர் திருவடியே.

7) மணிவாசக பெருமானின் மலரடி போற்றிட
அணிமா சித்தும் அருள்வார் நமக்கே.

8) கன்னல் ரசமென கனிந்தருளும் அகத்தீசர் நமது
இன்னல் தீர்ப்பார் இனிதே.

9) அழிக்க வியலா நச்சுக்கிருமியை
அழிக்க அருள்வான் ஆறுமுகவேலன்.

10) சைவத் தலைவன் வேலவனைப் போற்றிட
வையகம் போற்ற வாழ்வு அருள்வான்.

**பிறந்தவர்க்கு மோட்சகதி தேட வேணும்**
**பின்கலையும் முன்கலையும் சேரவேணும்**
**மறந்தவர்க்கு மறலிவந்தால் வலுவாருண்டோ**
**வருமுன்னே வலுக்கட்டிக் கொள்ள வேணும்**
**அறந்தழைக்க மறுமுகவன் பாதம் போற்றி**
**அர்ச்சனைசெய் தாலுதவி யகண்டவாசல்**
**துறந்துநின்ற திருவாடு துறையைப் பார்க்கில்**
**சூரியனும் சந்திரனும் தோற்றமாமே.**

**– மகான் அகத்தியர் – துறையறி விளக்கம் – கவி எண் 89.**

மனிதனாக பிறந்தால் மோட்சகதி தேட வேண்டும். நீங்களெல்லாம் வாழ்வது ஞானிகளை வணங்கி மோட்சகதி தேடுவதற்காகத்தான்.

**பின்கலையும் முன்கலையும் சேரவேணும்**
**மறந்தவர்க்கு மறலிவந்தால் வலுவாருண்டோ**
**வருமுன்னே வலுக்கட்டிக் கொள்ள வேணும்**

பின்கலையும் முன்கலையும் சேர்க்க மறந்தால் மறலி என்கிற எமன் வருவானே அப்பொழுது தடுப்பதற்கு உன்னிடம் ஆற்றல் இல்லையே என்பார்.

**அறந்தழைக்க மறுமுகவன் பாதம் போற்றி** – இவ்வுலகினில் உள்ள அத்தனை ஞானிகளுக்கும் ஆரம்ப தலைவன் ஆசான் சுப்பிரமணியர்தான். அவருடைய பாதத்தைப் பற்றும்போது அறம் தழைக்கும். தன்னால் ஈட்டப்பட்ட பொருளைக் கொண்டு ஏழைகளுக்கு பசியாற்ற வேண்டும். நாம் வாழ்வது நம்மை நோக்கி வருகின்ற மக்களிடம் அன்பு காட்டுவதற்கும், விருந்தை உபசரிப்பதற்கும்தான்.

**தாழ்வகலும் தர்மம் தழைத்தோங்கும் நமக்கு**
**வாழ்வளிக்கும் ஞானியரின் வழிபாடே.**

**– குருநாதர் அருளிய ஞானக்குறள் – குறள் எண் 4.**

ஞானிகள் வழிபாடு முன்னோர்கள் செய்த குற்றத்தால் ஏற்பட்ட தாழ்வை நீக்கும். ஞானிகளை தொடர்ந்து பூஜித்து வரும்போது, முன்னோர்களால் ஏற்பட்ட தாழ்வு அகலும், செல்வநிலை பெருகும். அன்பு செலுத்துவதால் தர்மசிந்தனை வரும். ஆகவே தர்மம் தழைத்தோங்கும். நாங்கள் வந்திருப்பது உங்களையெல்லாம் பூஜை செய்ய வைப்பதற்காகத்தான். இதுநேரம் வரை நாங்கள் சொன்ன கருத்துகளை தொடர்ந்து பின்பற்றி நீங்களும் முன்னேற வேண்டுமென்று முடிக்கிறேன் வணக்கம்.

–சுபம்–

# முருகன் திருவடி வாழ்க



**யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்**
**வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்**
**தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்**
**மானேயுன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.**

**– திருவாசகம் – திருச்சதகம் – அறிவுறுத்தல் – கவி எண் 12.**

**யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன் –** நான் பிறப்புக்கு அஞ்சவில்லை, அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ஆனால் இறப்பு என்ற ஒன்றை கண்டு நான் பயப்படுகிறேன். இதற்கு நான் என்ன செய்வேன்?

திருமந்திரத்தில் **தவிரவைத் தான்பிற வித்துயர் தானே** என்று மகான் திருமூலர் சொல்கிறார். இங்கே **யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்** என்று மகான் மாணிக்கவாசகர் சொல்கிறார்.

பிறவித் துயரைப் பற்றி நீ அறிந்து கொள்ள வேண்டும். ஆசான் அகத்தீசர் திருவடியே உனக்கு கதி. ஆசான் அகத்தீசர் திருவடியே உனது பிறவித் துயரைப் போக்கும். இதுதான் பிறவித் துன்பத்தை போக்கிக் கொள்ள சரியான உண்மையான பாதை. ஆசான் அகத்தீசர் திருவடியைப் பற்றி உன்னை கடைத்தேற்றிக் கொள் என்போம்.

**யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.**

**– திருமந்திரம் – அறஞ்செய்வான் திறம் – கவி எண் 252.**

இறைவனை வணங்கும்போது பூ கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, ஒரு பச்சிலையாவது இட்டு வணங்குங்கள். தாய்க்கு நிகரான பசுவிற்கு ஒரு கைப்பிடி பசும்புல்லையாவது கொடுங்கள். நாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி உணவையாவது பிறருக்கு கொடுங்கள். அப்படியில்லையென்றால் பிறரிடம் பேசும்போது இனிமையாக பேசுங்கள் என்கிறார் மகான் திருமூலதேவர்.

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.**

**– திருக்குறள் – இனியவை கூறல் – குறள் எண் 91.**

நாம் பிறரிடம் பேசும்பொழுது வஞ்சனை இல்லாத, அன்பு கலந்த சொற்களை பேச வேண்டும். பிறரிடம் இனிமையாக பேசினாலே போதும் அதுவே ஒரு புண்ணியம்.

செம்பொருள் உணர்ந்த மக்கள் பேசுகின்ற சொற்களே, உண்மையான இன்சொற்கள். செவ்விய பொருளை கண்டவன் சொல்லுகின்ற சொற்கள்

அனைத்தும் இன்சொற்களாகும். செம்பொருள் கண்டவர்கள் இதயத்தில் வஞ்சனை இருக்காது. அவர்கள் பேசுகின்ற சொற்களெல்லாம் இன்சொற்கள். ஆகவே இனிமையாக பேசுவதும் ஒரு அறமே ஆகும்.

நன்னெறியை கடைப்பிடித்தல், விருந்தை உபசரித்தல், மனைவிமக்களிடம் அன்பு காட்டுதல் போன்ற பண்புகளை மேற்கொண்டு இவன் வாழ வேண்டும். முதலில் தாய் தந்தையின் ஆசியைப் பெற வேண்டும். பிறகு மனைவியின் ஆசியைப் பெற வேண்டும். இது சரியை கிரியை மார்க்கம்.

என் கணவன் உயர்ந்தவன், அவன் நீடு வாழ வேண்டுமென்று மனைவி கணவனை வாழ்த்த வேண்டும். என்னுடைய தந்தையைப் போன்று உயர்ந்தவர் யாருமில்லை என்று உனது பிள்ளைகள் சொல்ல வேண்டும். இப்படி உன்னை சார்ந்தவர்கள் அத்தனை பேரும் உன்னை வாழ்த்தினால் உனக்கு வெகுவிரைவிலே ஞானம் சித்திக்கப் பெற்று நீ ஞானியாகலாம்.

புனித தீர்த்தமாடுவது பிறவித்துன்பத்திற்கு மருந்தாகாது. உடம்பிற்கு ஆரோக்கியமே தவிர, தீர்த்தமாடல் பிறவித்துன்பத்தை நீக்காது. சுத்தமான நன்னீர் உடலுக்கு ஆரோக்கியத்தையும் நீடிய ஆயுளையும் தரும்.

**உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்**
**மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்**
**பள்ளமும் மேடும் பரந்து திரிவரே**
**கள்ள மனமுடைக் கல்வியி லோரே.**

**– திருமந்திரம் – தீர்த்தம் – கவி எண் 509.**

**உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்** – தீர்த்தம் என்பது உன்னுடைய உள்ளத்திலே இருக்கிறது. அது வெளியே இல்லை.

**மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெட** – வாசி வசப்பட்ட மக்களுக்கு உண்ணாக்கு முன்னே தெரியும். உடம்பில் அனல் மிகுந்தால் அந்த இடத்திலே சிறு துவாரம் உண்டாகும். அதிலிருந்து அமிழ்தபானம் சொட்டும். அந்த தீர்த்தத்தை சாப்பிட சாப்பிட வினை கெடும். அந்த தீர்த்தத்தை பருகுவதே வினை கெடும் மார்க்கமாகும். புண்ணிய தீர்த்தங்களிலே நீராடுவது உடல் ஆரோக்கியத்தை தரும். ஆகவே யோகிகள் பருகிய அந்த தீர்த்தத்தைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

**பள்ளமும் மேடும் பரந்து திரிவரே** – குளங்கள், நீர்நிலைகள், பள்ளத்தை நோக்கி ஓடுகின்ற ஆறுகள் போன்றவற்றை புண்ணிய தீர்த்தமென்று எண்ணி நீராடுகிறீர்கள். ஆனால் உண்மையை நீங்கள் அறியவில்லை.

**கள்ள மனமுடைக் கல்வியி லோரே** – மெள்ள குடைந்து அமிழ்தபானத்தை பருகி பிறவித்துயரை நீக்க உன்னால் முடியாது.



அப்படியில்லாமல் சிறு தெய்வத்தை வணங்கினால் ஏதோ ஒரு ஆதாயம். அவ்வளவுதானே தவிர, அதனால் யாதொரு பயனுமில்லை.

சிறுதெய்வங்கள் அனைத்துமே துஷ்ட தெய்வங்கள். ஒருவன் துஷ்ட தெய்வத்தை இகழ்ந்து பேசினால், அந்த சிறுதெய்வம் உடனே அவனுக்கு இடையூறு செய்யும். ஆனால் ஞானிகளை இகழ்ந்து பேசினான் என்றால், அவர்கள் அப்படியே பேசாமல் இருப்பார்கள். ஏனென்றால் அவன் அறியாமையில் பேசுகிறான் என்பார். மன்னிக்கும் மனப்பான்மை ஞானிகளுக்கு உண்டு. ஆனால் துஷ்டதெய்வத்தை இகழ்ந்து பேசினால் உடனே தண்டித்துவிடும். ஞானிகள் குற்றத்தை பொறுத்துக் கொள்கின்ற மக்கள். குற்றம் என்பது சிறிதும் அவர்களிடம் இல்லை. அதனால்தான் ஞானிகள் அறக்கடலாக இருக்கிறார்கள். குணக்குன்றாக விளங்கக்கூடிய ஞானிகளை வணங்கும்போது, அதுபோன்ற உயர்ந்த குணம் நமக்கும் வரும்.

**கள்ளமகன்று கருத்தில் தெளிவு வரும்**
**வள்ளலார் வழிபாட்டில் தான்.**

**– குருநாதர் அருளிய ஞானக்குறள் – குறள் எண் 10.**

ஞானிகளின் திருவடிகளைப் பற்றும்போது, உள்ளத்தில் கள்ளம் இருக்காது, கருத்தில் தெளிவு வரும். ஞானிகளின் பாதத்தைப் பற்றும்போதுதான், பிறவித் துன்பத்தை நீக்க முடியும்.

ஞானிகளின் திருவடிகளைப் பற்றினால்தான், ஆதியாகிய ஒன்றை அறிய முடியும். ஆதியைக் கண்டுவிட்டால், தோற்றத்தை கண்டுவிட்டான் என்று அர்த்தம்.

மூலாதாரம்தான் ஆணி வேர். சுக்கிலம் இருக்கும் இடம்தான் ஆணி வேர். ஆதி என்பது வேர், அந்தம் என்பது உச்சி. இதைத்தான் கண்டு பிடிக்க வேண்டும். அவ்வளவு பெரிய விஷயத்தை அறிய முடியாது. இதற்குதான் ஞானிகளை வணங்க வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். நீங்கள் தினமும் ஞானிகள் திருவடியைப் பற்றி பூஜை செய்தாலே போதும். இப்படிப்பட்ட ஞானக்கருத்துகளையும், ஞானிகளின் பெருமைகளையும் பல வருடங்களாக தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம்.

முன் ஜென்மத்தில் ஞானிகளின் திருவடிகளைப் பற்றி பூஜை செய்த மக்கள், தொண்டு செய்த மக்கள் மட்டுமே ஓங்காரக்குடிலிற்கு வர முடியும். வேறு யாராலும் வர முடியாது. ஓங்காரக்குடிலுக்கு வரலாம், போகலாம், இருப்பவர்களும் இருக்கலாம், அவர்களுடைய கணக்கு முடிந்தால் போகலாம். யார் சென்றாலும், வந்தாலும் நாங்கள் கதவை திறந்தே வைத்திருப்போம், பண்புள்ள மக்கள் வந்து கொண்டே இருப்பார்கள்.

நீங்கள் ஆசான் நாமத்தை சொல்லும்போதே, ஞானிகள் உங்களைப் பற்றி சிந்திப்பார்கள். நீங்கள் தளர்ச்சி அடையும்போது நாங்கள் ஊக்கப்படுத்திக் கொண்டே இருப்போம். இல்லையென்றால் அவர்கள் மறுபடியும் உலக நடையில் கவனம் செலுத்துவார்கள். எங்களுக்கு ஆசான் இட்ட கட்டளைப்படி பேசிக் கொண்டிருக்கிறோம்.

அவனுடன் வரும். சில நேரங்களில் பொழுது விடியும் முன்னே இருட்டில் வயற்காட்டிற்கு செல்லும்போது, அச்சமில்லாமல் சென்று வருவதற்கு சிறுதெய்வத்தை வைத்திருக்கிறான்.

சித்திபெற வேண்டுமென்று வாசிப்பயிற்சி செய்வான், மூச்சைக் கட்டுவான். நோக்கம் நல்ல நோக்கம்தான். பிராணாயாமம் என்று சொல்லப்பட்ட வாசிப்பயிற்சியை அறிந்தால் நாம் சாகமாட்டோம் என்ற அவனுடைய சிந்தை உயர்ந்தது. வாசியை ரேசித்து நிறுத்துவான். உள்ளே சென்ற காற்றின் அழுத்தம் தாங்காமல் உள்ளே உள்ள மென்மையான பாகங்கள் வெடித்து கண், காது, மூக்கு வழியே இரத்தம் வந்து இறந்து போவான். செயல்முறை சரியில்லாமல் இறந்து போகிறான். அவனவன் இஷ்டத்திற்கு வாசியை கட்டி, இப்படி இடைப்பட்டு இறந்து போகிறான். இவர்களை சிறுதெய்வமாக வைத்து வணங்குகிறார்கள்.

சாதாரண இல்லறத்தான் எண்பது வயது வரை நன்றாக வாழ்ந்து சாவான். ஆனால் வாசிப்பயிற்சி மேற்கொள்கிறேன் என்று ஒன்றுகிடக்க ஒன்று செய்கிறவன் நோய்வாய்ப்பட்டு ஆயுள் இருக்கும் முன்னே இடைப்பட்டு அநியாயமாக சாகிறான்.

ஆசான் சுப்பிரமணியரால்தான் எல்லா தேவதைகளும் உருவாக்கப்பட்டது. யோகிகளுக்கு இடையூறு வராமல் தடுப்பதற்கு இவற்றை உருவாக்கினார்கள்.

போர் வீரன் போரில் இறந்து போனான் என்றால், அவன் நினைவாக நடுக்கல் வைத்து சிறுதெய்வமாக வணங்குவார்கள். அந்த நடுக்கல்லை பூஜை செய்யும் பொழுது அதற்கு ஒரு ஆற்றல் உண்டாகின்றது. இப்படிப்பட்ட சிறு தெய்வங்களை வணங்குவதால் பொழுது போகலாமே தவிர, அருளைப் பெற முடியாது.

ஞானிகளின் திருஅருளைப் பெறுவதற்காகத்தான், நாம் பூஜை செய்கிறோம்.

**பிறவா நெறிதந்த பேரரு ளாளன்**
**மறவா அருள்தந்த மாதவன் நந்தி**
**அறவாழி அந்தணன் ஆதிப் பராபரன்**
**உறவாகி வந்தென் உளம்புகுந் தானே.**

**– திருமந்திரம் – திருவருள் வைப்பு – கவி எண் 1803.**

அருளைப் பெறுவதற்கு யாரை வணங்க வேண்டும்?

அறக்கடலாகவும், கருணையே வடிவாகவும் இருக்கக்கூடிய ஞானிகளை வணங்க வேண்டும்.

யார் திருவடியைப் பற்றி பூஜை செய்தால் பிறவித் துன்பம் அற்றுப் போகும்?

ஞானிகளின் திருவடிகளைப் பற்றி பூஜை செய்தால்தான், பிறவித் துன்பம் அற்றுப் போகும்.



ஆயுள் பெருக்கம் என்பது உலக வாழ்க்கை வாழ்வதற்காக அல்ல. மோட்சகதியை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆயுள் பெருக்கம் ஆகும்.

**அகரந்தான் பரவெளியி லொளிவுண்டாச்சு**
**அதில்நின்றே காற்றுடனே நெருப்புண்டாச்சு**
**இகரந்தான் தண்ணீர்மண் ரெண்டதாச்சு**
**இதில்நின்றே ஜீவாத்மா தோன்றலாச்சு**
**உகரந்தான் பூமிபரு வதமதாச்சு**
**உகந்ததொரு நான்குவித யோனியாச்சு**
**ஒகரசுழி வட்டமெழு தோற்றமாச்சு**
**உண்மைபரா பரத்தினுட செயல்தானாதி.**

**– சுப்பிரமணியர் ஞான சைதன்யம் – கவி எண் 83.**

**அகரந்தான் பரவெளியி லொளிவுண்டாச்சு** – முதன் முதலில் ஒளிதான் உண்டானது. அந்த ஒளியின் அசைவின் காரணமாகத்தான் காற்று, நெருப்பு, தண்ணீர், மண் அதன்பிறகு ஜீவாத்மா தோன்றியது. இயற்கை சிற்றணுவாக இருக்கிறது. அதே இயற்கை எங்கும் வியாபித்த பரம்பொருளாகவும் இருக்கிறது.

**ஒருபிரமன் அண்டங்கள் அடிமுடிப் பெருமையே**
**உன்னமுடியா அவற்றின்**
**ஓராயி ரங்கோடி மால்அண்டம் அரன்அண்டம்**
**உற்றகோ டாகோடியே**
**திருகலறு பலகோடி ஈசன்அண் டம்சதா**
**சிவஅண்டம் எண்ணிறந்த**
**திகழ்கின்ற மற்றைப் பெருஞ்சத்தி சத்தர்தம்**
**சீரண்டம் என்புகலுவேன்**
**உருவுறும்இவ் வண்டங்கள் அத்தனையும் அருள்வெளியில்**
**உறுசிறு அணுக்களாக**
**ஊடசைய அவ்வெளியின் நடுநின்று நடனமிடும்**
**ஒருபெருங் கருணைஅரசே**
**மருவிஎனை ஆட்கொண்டு மகனாக்கி அழியா**
**வரந்தந்த மெய்த்தந்தையே**
**மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்**
**வல்லநட ராஜபதியே.**

**– திருஅருட்பா – நடராஜபதி மாலை – கவி எண் 1359.**

**உருவுறும்இவ் வண்டங்கள் அத்தனையும் அருள்வெளியில் உறுசிறு அணுக்களாக** – அணு என்பதே சிறியது. உறுசிறு அணுக்கள் என்று சொல்லும்போது கண்ணுக்குப் புலப்படாத சிறு அணுக்கள் என்கிறார்.

**ஊடசைய அவ்வெளியின் நடுநின்று நடனமிடும் ஒருபெருங் கருணைஅரசே** – அந்த சிற்றணு இயங்குவதற்கு ஒரு இயக்கம் காரணமாக இருக்கிறது என்கிறார்.

ஜீவன் என்பது ஒரு சிற்றணு. அந்த சிற்றணு பல கோடிக்கணக்கான செல்களை உருவாக்கி ஒரு இயக்கத்தை உண்டாக்குகிறது. அதுதான் பரிணாம வளர்ச்சி.

பரிணாம வளர்ச்சி எல்லா ஜீவராசிகளுக்கும் உண்டு. அந்த சிற்றணு எந்தெந்த உடலை சார்கிறதோ, அந்தந்த உடலுக்கு ஏற்றாற்போல் அந்தந்த ஜீவராசிகளின் சிந்தனையாக மாறுகிறது.

ஆதியில் தோன்றிய விந்து நாதமே உலக உற்பத்திக்கு காரணம் ஆகும். சிந்தனை அசைவுதான் இவ்வுலக உற்பத்திக்கு காரணம். முதலில் சிந்தனையாக இருக்கிறான், பிறகு ஆண் பெண் சேர்க்கையின் காரணமாக சுக்கிலம் சுரோணிதம் ஒன்றுபடுகின்றது, அதன் காரணமாக உயிர் உற்பத்தியாகிறது.

இயற்கைக்கு மாறுபட்டு எதுவும் செய்ய முடியாது. இயற்கையில் ஏற்கனவே உள்ள ஒன்றைக் கொண்டுதான் இன்னொன்றை உற்பத்தி செய்ய முடியும். எந்த ஜீவராசியும் இயற்கைக்கு மாறுபடாது.

இவ்வுலகினில் உள்ள ஜீவராசிகளின் மூலத்தன்மையை மாற்ற முடியாது. அந்த மூலத்தன்மையைக் கொண்டு இன்னொன்றாக மாற்றலாமே தவிர, புதிதாக வேறொன்றை உற்பத்தி செய்ய முடியாது. இன்னொன்றாக மாற்றிய ஒன்றிலும் அதன் மூலத்தன்மை இருக்கத்தான் செய்யும்.

இவ்வுலகினில் உள்ள மழைநீர்தான், எல்லா உயிர்களிடத்தும் சுக்கிலமாக இருக்கிறது. மனிதனிடம் உள்ள சுக்கிலம் மாசுபட்டுள்ளது. இந்த கூட்டுப்பொருள் வெளியே இருக்கும்போது சுத்தமாக இருக்கிறது. ஆனால் உடம்பில் சாரும்போது, உடம்பில் உள்ள கருவிகரணங்களினால் அந்த சுத்தநீரானது மாசுபடுகின்றது.

சுக்கிலமும், மழைநீரும் ஒன்றுதான். ஆனால் மழைநீர் சுத்தமாக இருக்கிறது, சுக்கிலம் மாசுபட்டிருக்கிறது. கருவிகரணங்களோடு சேரும் போது சுக்கிலம் மாசுபடுகின்றது. இந்த மாசை நீக்குவதற்குதான் பிராணாயாமம் எனும் வாசிப்பயிற்சியை யோகிகள் செய்கிறார்கள்.

சுக்கிலசுரோணிதம்தான் ஆதியில் தோன்றியது. இந்த மனிதகுலம் தோன்றுவதற்கு மூலம் சுக்கிலமே. இவனுடைய சுக்கிலம், இவன் தந்தையிடமிருந்து வந்தது. தந்தையிடமிருந்த சுக்கிலம் அவருடைய தந்தையிடமிருந்து வந்தது. இப்படி பார்த்துக் கொண்டே போனால் இதற்கெல்லாம் ஆதி என்று சொல்லப்படுவது சுக்கிலம் மட்டுமே. ஆகவே ஒன்று பலவாயிற்று.



மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுவதற்கு ஆதியாகிய இயற்கையை அறிய வேண்டும். யோகிகள் ஆதியாகிய சுக்கிலம் என்கிற இயற்கையை அறிந்து அதை வென்றார்கள்.

சுக்கிலத்தைக் கட்டும்போது ஜீவன் கட்டுப்படும். அதைக் கட்டாவிட்டால் ஜீவன் போய்விடும். ஆதிமனிதன் அடுத்த வித்தை உண்டாக்கினானே தவிர, அவனுடைய சுக்கிலத்தை கட்டவில்லை. இது மிகப்பெரிய இரகசியம். விட வேண்டியதை விட வேண்டும், கட்ட வேண்டியதை கட்ட வேண்டும். அசுத்த சுக்கிலத்தை விட்டுவிட்டு, சுத்தமான சுக்கிலத்தை கட்ட வேண்டும். யோகிகள் எந்த சுக்கிலத்தால் தோன்றினானோ, அந்த சுக்கிலத்தை கட்டுகிறான்.

சிற்றணுதான் ஆன்மா. அந்த ஆன்மா சுக்கிலமாக இருக்கிறது. சுக்கிலம்தான் உயிர், உயிர்தான் சுக்கிலம். அதுதான் ஆதி. அதை நாடி தன்வயப்படுத்துகிறான். இது மிகப்பெரிய ஒரு வாய்ப்பு. ஆதியை நாடுகின்ற மக்கள் பரவீதியை நாடுகின்றான் என்று பொருள்படும். பரவீதியை நாடுகின்றான் என்றால் ஆதியை நாடுகின்றான் என்று பொருள்படும். ஆதியை அறிவது என்பது மிகவும் கடினம்.

ஆதி என்பது நான்காம் படி. பக்தி நெறியில்லாமல் இதை போதிக்க முடியாது. சரியை, கிரியை மார்க்கத்தை அறிந்த பிறகே நீங்கள் இதை அறிய முடியும். ஆகவே உங்களுக்கு முதலில் சரியையாகிய பக்தி நெறியைத்தான் போதிக்க வேண்டும்.

**சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்**
**பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடுங்**
**கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடுஞ்**
**சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே.**

**– திருமந்திரம் – இதோபதேசம் – கவி எண் 2114.**

**சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்** – தலைவன் நெருப்பு வடிவமானவன். அவனை சார்ந்தவர்க்கு இன்பத்தைக் கொடுக்கும் என்று சொல்கிறார்.

**பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடும்** – தலைவனை சாராவிட்டால் துன்பமான பிறவி உண்டாகும் என்கிறார். இன்னா பிறவி என்றால் துன்பமான பிறவி என்று பொருள். அது துயரமான பிறவி ஆகும். ஆகவேதான் சரியை, கிரியை மார்க்கத்தை போதிக்கிறார்கள்.

சிறுதெய்வ வழிபாட்டில் பெரும்பாலானோர் தனது வாழ்க்கையை வீணாக்குகிறார்கள். இவன் வணங்குகின்ற தெய்வமே கடுமையாக இருக்கிறதென்றால், அதை வணங்குகின்ற இவன் எப்படி இருப்பான்? ஆரம்ப காலங்களிலே வீடு ஒரு பக்கம், வயல் ஒரு பக்கம் இருக்கும். இரண்டிற்கும் ஒரு கிலோமீட்டர் அல்லது பல கிலோ மீட்டர் இருக்கும். அவன் வீட்டிலிருந்து வயற்காட்டிற்கு தனியாக போகும்போது, அவன் வணங்கும் அந்த சிறுதெய்வம்